**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 37/2023**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.11.2025 | | |
| பெயர்: | பாலகுமாரன் (PW– 1 Cross con. ) | தகப்பனார் பெயர்: | சுந்தரம் |
| கிராமம்: | சீர்காழி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | ஓய்வு பெற்ற வியாபாரி | வயது : | 69/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 12.11.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 16.20)**

கடந்த 25.06.2007 தேதியில் தாவா திருக்கோயிலுக்கு தங்கராஜ் என்பவரால் மகா கும்பாபிஷேகம் பரம்பரை அறங்காவலர் என்ற முறையில் நடத்தப்பட்டது என்றால் தவறு. கும்பாபிஷேகம் நாடிமுத்து, அவரது சகோதரர் ஜெயபால் ஆகிய இருவரால் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. தாவா திருக்கோயிலில் தீமிதி திருவிழா அபிஷேகங்கள் மற்றும் இதர நிகழ்ச்சிகளை தங்கராஜீம் அவருக்கு உதவியாக பிரதிவாதியும் நடத்தினார்கள் என்றால் தவறு. பிரதிவாதி மற்றும் வாய்க்காங்கரை தெருவாசிகள் சேர்ந்து நடத்துகிறார்கள்.

2. தங்கராஜிக்கு வயதாகிவிட்ட காரணத்தினால், தங்கராஜிக்கு பராமரிக்க இயலாத காரணத்தால் தெருவாசிகள் சேர்ந்து ஆலயத்தை நிர்வகிக்க முடிவு செய்து அதற்காக சீர்காழி ஸ்ரீ ருத்ர மகா காளியம்மன் நல சங்கம் பதிவு செய்யப்பட்டது என்று நான் பிராதில் கூறியுள்ளது தவறு என்றால் மேற்படி சங்கமானது சங்க சட்ட விதிகளின்படி மேற்படி தேதியில் பதிவு செய்யப்பட்டது. கடந்த 21.07.2022–ல் பதிவு செய்யப்பட்ட (வா.சா.ஆ.1 ஆவணம்) மேற்படி

சங்கமானது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தங்கராஜ் என்பவர் கோயிலை பராமரிக்க இயலவில்லை என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. அர்ச்சகர் நியமணம் செய்வதும், அவருக்கு ஊதியம் வழங்குவதும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3. 31.07.2022–ல் தீமிதி திருவிழா நடத்தப்பட்டது என்பது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 ஆவணம் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சீர்காழி காவல் நிலையத்தில் யாரும் தீமிதி திருவிழா நடத்தக்கூடாது என்று உத்தரவு போட்டுள்ளனர் என்றால் வாய்மொழியாக அவ்வாறு கூறப்பட்டது. வாதி நலச்சங்கம் 2007–ல் குடமுழக்கு நடத்தியது வழக்கிற்காக பொய்யாக கூறப்படுவது என்றால் சரியல்ல. வாய்க்காங்கரை தெருகிராம வாசிகள் கோயிலின் முகப்பில் 25.06.2007–ல் எவ்வித கல்வெட்டும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. 25.06.2007 லேயே பரம்பரை அறங்காவலரான தங்கராஜ் பிள்ளை கும்பாபிஷேகம் நடத்தியாக குறிப்பிட்டு கல்வெட்டு வைக்கப்பட்டுள்ளது என்றால் வழக்கிற்காக 2022–ல் பிரதிவாதியால் வைக்கப்பட்டது.

4. தாவா திருக்கோயிலின் வாயிலில் கல்வெட்டு உள்ளது உண்மைதான். அந்த கல்வெட்டிலில் தங்கராஜ் பிள்ளை என்ற பெயர் உள்ளது. பிரதிவாதி நடராஜன் தாவா திருக்கோயிலில் உள்ள உண்டியல் திருடப்பட்டது சம்பந்தமாக சீர்காழி காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் உண்டியல் கண்டுபிடிக்கப்பட்டு பிரதிவாதி வசம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். அதே இடத்தில் மீண்டும் உண்டியல் வைக்கபட்டது என்றால் சரிதான்.

5. தாவா திருக்கோயிலில் விநாயகர்சதுர்த்தி நடத்துவது சம்மந்தமாக எங்களுக்கும் பிரதிவாதி தரப்புக்கும், விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். இதுசம்பந்தமாக சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் அமைதி பேச்சுவார்த்தை நடைப்பெற்றது என்றால் சரிதான். அதில் எவ்வித உடன்பாடும்

ஏற்படவில்லை என்பதால் யாரும் விநாயகர் ஊர்வலம் நடத்தக்கூடாது என்று வட்டாட்சியர் உத்தரவிட்டார் என்றால் சரிதான். மேற்படி அமைதி பேச்சுவார்த்தை 04.08.2022–ல் நடத்தப்பட்டது.

6. மேற்படி கோயிலின் நிர்வாகம் வாதியின் வசம் ஒப்படைக்கப்பட்டது என்று நான் கூறினால் தவறு என்றால் சரியல்ல. யார் ஒப்படைத்தார்கள் என்றால் தங்கராஜ் பிள்ளை ஒப்படைத்தார். தேதி, மாதம் ஞாபகமில்லை, ஆனால் 2022–ம் வருடம். கோயிலில் வைத்து தங்கராஜ் ஒப்படைத்தார். தங்கராஜ் ஒப்படைத்தற்கு ஆதாரமாக ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை. தங்கராஜ் நிர்வாகத்தை வாதியின் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. மயிலாடுதுறை இந்து சமய அறநிலைய துறை இணை ஆணையர் முன்பாக தங்கராஜை பரம்பரை அறங்காவலராக நியமணம் செய்ய வேண்டி O.A.No. 3/2022 மனு கொடுத்திருந்தார் என்றால் கொடுத்திருக்கலாம்.

7. அதில் எங்களுக்கு அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. வழக்கறிஞர் வைத்து ஆஜர்ஆகியுள்ளேன். தங்கராஜ் 26.11.2023–ல் இறந்துவிட்டார். அதன்பிறகு அந்த மனுவில் பிரதிவாதி மற்றும் அவரது சகோதர் கோபு பரம்பரை அறங்காவலராக நியமிக்க கோரியுள்ளார்கள் என்றால் சரிதான். தங்கராஜ்பிள்ளையிடம் கோயிலின் சாவியை தெருவாசிகளால் ஒப்படைக்கப்பட்டது என்று நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. தங்கராஜின் மாமனார் இறந்தபிறகு அவரிடமிருந்த சாவி தங்கராஜிடம் வரப்பெற்றது என்றால் சரியல்ல.

8. வாதி நலச்சங்கத்தால் தாவா கோயில் நிர்வகிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி நலச்சங்கத்திற்கும் தாவா கோயிலுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா கோயிலை நான் நிர்வகிக்காதபோது பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாது என்று நான் வழக்கு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எவ்வித வழக்கு மூலம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா கோயிலில் டிரஸ்டி என்ற

அடிப்படையில் பிரதிவாதி வசம் உள்ளது என்றாலும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 16.55)**